**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. S.T.C. No. 538/2025**

**Deposition of Witness for Complainant PW1**

**திரு. லக்ஷ்மணன் த/பெ. ராமன் வயது. 44 ஊர். பில்லிக்கம்பை**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**03.06.2026 Witness Signature :**

**PW1 குறுக்கு விசாரணை 12.25 P.M**

1. நான் கொடுத்த புகாரில் உள்ள விவரத்தை அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் சிவில் பிரச்சனை உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் புகாரில் ஆவணங்களின் எண்களை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் புகாரில் குறிப்பிட்டுள்ள விடுதலை பத்திரத்தில் என் தகப்பனார் குடும்பத்தை சேர்ந்த அனைவரும் விடுதலை பத்திரம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அதேபோல் என் தகப்பனார் குடும்பத்தை சேர்ந்த அனைவரும் சேர்ந்து என் அப்பாவிற்கு ஒரு விடுதலை பத்திரம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். எதிரியின் அப்பாவிற்கு செய்து கொடுத்த விடுதலை பத்திரத்தில் நானும் ஒரு சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் பாகத்தைவிட எதிரியின் பாகம் 43 செண்ட் அதிகமாக செய்து கொடுத்துள்ளார்கள் என்று பின்னர்தான் தெரியவந்தது. என் அப்பா 2008ல் இறந்துவிட்டார். ஆனால் அந்த ஆவணம் ஏற்படுத்தியது 2007 என்று சொன்னால் சரிதான். எனது அப்பா உயிரோடு இருக்கும்வரை விடுதலைப் பத்திரம் ஏற்படுத்தியது சம்பந்தமாக எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை

என்று சொன்னால் சரிதான்.

2. நான் இதுவரை தவறாக விடுதலை பத்திரம் ஏற்படுத்திவிட்டார்கள் என்று எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எதிரிமீது கொடுத்த புகாரில் தாக்கல் செய்த CC.No.51/2008 என்ற வழக்கானது பொய் வழக்கு என்று எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்று சொன்னால் வழக்கு தடயப் பொருளை கைப்பற்றவில்லை என்று விடுதலை செய்யப்பட்டார். எதிரி இந்த நீதிமன்றத்தில் விடுதலை ஆனது சம்பந்தமாக நான் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது சரிதான் என்று நான் போட்ட மனுவை தள்ளுபடி செய்தார்கள் என்றால் சரிதான். 06.05.2024ம் தேதியில் வங்கியில் கொடுத்த ரிட்டன் மெமோவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த சங்கதியை நேரடியாக எதிரியிடம் பார்த்து சொல்லியிருக்கிறேன் மற்றும் மெசேஜ் மூலமாகவும் சொல்லியுள்ளேன்.

3. இந்த வழக்கில் என் அப்பாவிற்கு கொடுத்த விடுதலை பத்திரத்தையும் என் அப்பா கொடுத்த விடுதலை பத்தரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ராஜன், ராமன், லட்சுமி ஆகிய மூவரும் ஹிரியன் என்பவருக்கு 17.10.2007ல் 2023/2007 என்கிற விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 03.06.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**